புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் 2005
எவ்வாறு இச்சட்டம் பாதிக்கிறது : மருத்துவமனைகள்

## அடிப்படைகள்

- புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் (SFOA) மே 31, 2006 அன்று அமலுக்கு வருகிறது.
- இச்சட்டம் ஒன்டேரியோவின் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மறைமுகப் புகையின் (Second-hand smoke) இடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, உள்ளடக்கப்பட்ட வேலையிடங்கள் மற்றும் உள்ளடக்கப்பட்ட பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்கிறது.

## அரசு தனியார் மற்றும் மனநோய் மருத்துவ மனைகள்

எந்த ஒரு உள்ளடக்கப்பட்ட பொது இடம் அல்லது உள்ளடக்கப்பட்ட வேலையிடத்திலம், புகை-அற்ற ஒன்டேரியோ சட்டத்தின் பிரிவு 9 (1)-ன் கீழ், புகைபிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் இச்சட்டத்தின் கீழ், ஒரு மருத்துவமனை என்பது ஒரு உள்ளடக்கப்பட்ட பணியிடம் மற்றும் ஒரு உள்ளடக்கப்பட்ட பொது இடம் ஆகிய இரண்டுமாகவே கருதப்படுகிறது.

மேலும் ஆரசு மருத்துவமனைகள் சட்டம், தனியார் மருத்துவமனைகள் சட்டத்தில் வரையிறுக்கப்பட்டபடிஎந்த ஒரு மருத்துவமனையின், அல்லது  மனநல சட்டத்தில் வரையிறுக்கப்பட்டபடி உளநோய் வசதியின் நுழைவு வாயில் அல்லது வெளியேறும் வழியின் ஒன்பது (9) மீட்டர் சுற்று வட்டாரத்துக்குள் புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும், புகையிலை விற்பதும் மேற்கூறிய இடங்களில் தடை செய்யப்பட்டுள்ளது.

புகை பிடிக்கும் நோயாளிகள் அல்லது ஊழியர்களுக்கு புகைப்பிடிப்பு புகலிடம் ஒன்றை வெளிப்புறத்தில் மருத்துவமனை அமைத்துக் கொடுக்கலாம். வெளிப்பக்கத்தில் புகை பிடிப்பு புகலிடம் ஒன்றை அமைத்துக் கொடுக்கும் மருத்துவமனை புகை பிடிப்பு புகலிடத்தில் இரண்டு சுவர்களும், ஒரு கூரையும் தவிர வேறு எதுவுமில்லாமலிருப்பதை உறுதிபடுத்த வேண்டும்.

## வேலை கொடுப்பவராக இருக்கும் மருத்துவமனைகளின் கடமைகள்

வேலை கொடுக்கும் ஒவ்வொருவரும் கீழ்க்கண்டவற்றை உறுதி படுத்துவது அவசியமாகும்:

- புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது என ஊழியர்கள், நோயாளிகள் மற்றும் பார்வையாளர்கள் அறிந்துள்ளதை உறுதிபடுத்த வேண்டும்.
- சாம்பல் கிண்ணங்களையும் மற்றும் சாம்பல் கிண்ணங்களாக உபயோகிக்கப்படுபவற்றையும் அப்புறப்படுத்த வேண்டும்.
- பணியிடத்தில் யாரும் புகை பிடிக்காமலிருப்பதை உறுதிபடுத்த வேண்டும்.
- இவ்விதிகளை பின்பற்றாதவர்கள் ஸ்தாபனங்களில் இருந்து வெளியேற்றப்படுவதை உறுதி படுத்த வேண்டும்.
- *நோ ஸ்மோகிங் (புகை பிடிக்கக்கூடாது)* குறிகளை அனைத்து நுழைவு வாயில்கள், வெளியேறும் வழிகள், கழிப்பிடங்கள் மற்றும் மற்ற பிற பொருத்தமான இடங்களில், புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதை அனைவரும் அறியும் வண்ணம் ஒட்டி வைக்கவும். தேவையான அடையாளக் குறிகளைப் பெறுவது குறித்த தகவலுக்கென, தயவுசெய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

## பாரம்பரிய பழங்குடி (அபாரிஜினல்) கலாச்சார அல்லது இறை வழிபாட்டுத் தேவைகளுக்கென புகையிலை உபயோகித்தல்

பழங்குடி வாசி ஒருவரின் வேண்டுகோளின் பேரில், பாரம்பரிய கலாச்சார அல்லது இறை வழிபாட்டுத் தேவைகளுக்கென புகையிலையை உபயோகிக்கும் பொருட்டு, குடியிருப்பவருக்காக கட்டிடத்திக்குள் ஒரு பகுதியை இயக்குபவர் ஒதுக்கிவைக்க வேண்டும்.

## அமலாக்கம்

சட்டத்தை அமல்படுத்தும் பொருட்டு, மதுபானக் கடைகள் மற்றும் உணவு விடுதிகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பது மற்றும் சோதனையிடுவது போன்ற வேலைகளை உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவுகள் மேற்கொள்ளும். இந்த சட்டத்துக்கு இணங்களை உறுதிப்படுத்தவோ அல்லது அதை அமல்படுத்தவோ அரசு சுகாதாரப் பிரிவு சோதனையாளர்கள் ஒரு இடத்தின் உள்ளே நுழைய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அபராதங்கள்

சட்டத்தின் இப்பிரிவை மீறுபவர்களுக்கு விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்ச கார்ப்பரேட் (கம்பனிகளுக்கென) அபராதம் பட்டியலிடப்படவில்லை. அதாவது அபராதத் தொகையை நிர்ணயிப்பது அமைதி பேணும் நடுவரின் (Justice of the peace) பொறுப்பாகும். தனி மனிதர் ஒருவருக்கு உயர்ந்தபட்சம் $5,000 அபராதமாக விதிக்கப்படக்கூடும்.

இந்த தகவல் தாளை ஒரு விரைவு நோக்கீட்டு உபயோகத்திற்கென மட்டுமே பயன் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

கட்டணமற்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும் நீங்கள் தகவல் பெறலாம்.

- **INFOline** 1-866-396-1760
- **TTY** 1-800-387-5559

வேலை நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

புகை அற்ற ஒன்டேரியோ சட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து சுகாதார முன்னேற்றத்திற்கான ஒன்டேரியோ அமைச்சக வலையகத்திற்கு வருகை தாருங்கள்: http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp.

மே 2006



Ontario